[23rd January 1961

திறக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளி சிவாவின் ஞாபகார்த்தமாகப் பெயரிடப்பட்டது. அதன் பேரில் வேறு நினைவுச் சின்னம் அமைக்கும் யோசனை மேற்கொள்ளப்படவில்லை.

SRI T. L. SASIVARNA THEVAR : ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. திருப்பூர் குமரன் இவர்களுடைய ஞாபகார்த்தமான கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது?

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : பாப்பாரப்பட்டியில் அவர் பேரால் நிறுவ இருக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தில் அவருடைய ஞாபகச் சின்னமாக உருவச் சிலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா? அதைப்பற்றி யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசாங்கம் ஒன்றும் அது மாதிரி செய்வதாக இல்லை. தனிப்பட்டவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் அதற்கு என்ன உதவி அளிப்பது என்பது பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

MR. SPEAKER : Questions Nos. 102 and 103 may be taken up together as they relate to the same subject.

Talavadi firka

* 102 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether this Government have received any communication from the Chairman, Zonal Council, regarding the merger of the Talavadi firka of Madras State with the Mysore State?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*** 103 *Q*.—SRI S. M. ANNAMALAI :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தளவாடிப் பிர்க்காவை மைசூர் மாநிலத்துடன் சேர்க்கக் கோரி மகசர் வந்ததா?

(இ) அப்படியாயின், அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government did not consider it necessary to take any action in the matter.

SRI N. K. PALANISAMI : அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மைசூர் ராஜ்யத்துடன் சேரவேண்டும் என்று வரி கொடா இயக்கம் நடத்துவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி